# விவேகானந்த கல்லூரி

04543-258234, 258334
நிகரி : 04543-258358

(பல்கலைக்கழக மானியக் குழுவால் ஆற்றல்சார் கல்லூரி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது)
மதுரை காமராசர் பல்கலைக் கழகத்துடன் இணைந்த தன்னாட்சி பெற்ற குருகுல வாழ்க்கைப் பயிற்சி நிறுவனம்
தேசிய தர நிர்ணயக் குழுவினரால் (NAAC) ‘A’ கிரேடு மறு மதிப்பீடு செய்யப் பெற்றது (CGPA 3.59 out of 4.00)
(மேலாண்மை: ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சி மாவட்டம்)
திருவேடகம் மேற்கு – 625 234, மதுரை மாவட்டம், தமிழ்நாடு
இணையதளம்: www.vivekanandacollege.org மின்னஞ்சல்: principal@vivekanandacollege.org

சுவாமி வேதானந்த
செயலர்



முனைவர் சி.இராஜா
முதல்வர்

# குருகுலச் சுடர்

கல்வியாண்டு 2017-18

சுடர் : 7

ஜனவரி 2018


**அன்புடையீர்,**

வணக்கம். குருகுலம் இனிதே நடைபெற்று வருகின்றது. கடந்த ஜனவரி 2018ல் நடந்த நிகழ்ச்சிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

## குருகுலம் சம்பந்தமானது

* 08.01.2018, 22.01.2018, 29.01.2018 ஆகிய திங்கட்கிழமைகளில் காலை 08.10 மணிக்கு கல்லூரியில் தேசியக் கொடியேற்றம் நடைபெற்றது.
* 06.01.2018, 20.01.2018, 27.01.2018 ஆகிய சனிக்கிழமைகளில் மாலை 06.00 மணி முதல் 06.45 மணி வரை கல்லூரியின் பிரார்த்தனைக்கூடத்தில் பஜனை சிறப்பாக நடைபெற்றது.
* 14.12.2017 முதல் 12.01.2018 வரையிலான மார்கழி மாதத்தின் அனைத்து தினங்களிலும் கல்லூரி வழிபாட்டுக் கூடத்தில் அதிகாலை 05.30 மணிமுதல் 06.00 மணிவரை ஆண்டாள் நாச்சியாரின் திருப்பாவை, மாணிக்கவாசகரின் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி மற்றும் தெய்வீகப் பாடல்களுடன் மார்கழி வழிபாடு மிகச்சிறப்பாக நடைபெற்றது.
* 01.01.2018 அன்று அதிகாலை 05.30 மணிமுதல் 07.00 மணிவரை கல்லூரியின் வழிபாட்டுக் கூடத்தில் ‘கல்பதரு தினம்’ கொண்டாடப்பட்டது. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பக்தர்கள் வேண்டிய வரங்களையெல்லாம் வழங்கிய ஜனவரி முதலாம் நாளைப் போற்றும் இத்தினத்தில் சிறப்பு பஜனை மற்றும் செயலர் சுவாமிகளின் அருளுரையுடன் விழா நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.
* 05.01.2018 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் காலை 09.30 மணிக்கு ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. இதில் கல்லூரியின் முன்னாள் செயலர் சுவாமி பரமானந்த புதிய செயலர் சுவாமி வேதானந்த அவர்களை அறிமுகம் செய்துவைத்து உரையாற்றினார். பின் செயலர் சுவாமி வேதானந்த ஆசியுரை வழங்கினார். இக்கூட்டத்தில் முதல்வர், துணைமுதல்வர், முதன்மையர் மற்றும் தேர்வுக் கட்டுப்பாட்டாளர், அக தர உத்தரவாத மைய ஒருங்கிணைப்பாளர் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.
* 11.01.2018 அன்று மார்கழி மாதம் 27ம் நாள் ஆண்டாள் நாச்சியார் ஸ்ரீரங்கநாதரை குறித்து நோற்ற நோன்பினை இறுதி செய்த நாளை கொண்டாடும் ‘கூடாரை வல்லி’ நாள் கல்லூரியின் வழிபாட்டுக் கூடத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று அதிகாலை 05.30 மணிக்கு கல்லூரியின் முதல்வர், துணைமுதல்வர் மற்றும் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, பல்லாண்டு ஆகிய பாசுரங்களைப் பாடி வழிபாடு செய்தனர். இந்நிகழ்ச்சியில் இந்திய தத்துவவியல் துறைத்தலைவர் பேராசிரியர் C.R.அனந்தராமன் ஆண்டாள் நாச்சியாரின் நோன்பு குறித்து சிறப்புரையாற்றினார்.
* 11.01.2018 அன்று பிற்பகல் 03.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் ‘பொங்கல் விழா-2018’ கொண்டாடப்பட்டது. இதில் கல்லூரியின் அனைத்து துறைகள் சார்பாக மாணவர்கள் 12 குழுக்களாகப் பிரிந்து பொங்கல் வைத்து சூரியக்கடவுளுக்கு படையலிட்டு வழிபாடு செய்தனர். இவ்விழாவில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.
* 12.01.2018 அன்று காலை கல்லூரியின் வழிபாட்டுக் கூடத்தில் சுவாமி விவேகானந்தரின் 155வது ஜெயந்திவிழா மற்றும் விவேகானந்தரின் சிஷ்யை சகோதரி நிவேதிதையின் 150வது ஜெயந்திவிழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கல்லூரியின் முன்னாள் துணைமுதல்வர் முனைவர் R.இளங்கோ, “சுவாமி விவேகானந்தர்: இளைஞர்களுக்கான முன்மாதிரி” என்ற தலைப்பிலும், கரூர், ஸ்ரீ சாரதா நிகேதன் பெண்கள் கல்லூரியின் செயலர், யதீஸ்வரி நீலகண்டப்ரியா அம்பா “சகோதரி நிவேதிதையின் வாழ்வும் செய்தியும்” என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினர். இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் S.இராஜா தலைமையுரையும், துணைமுதல்வர் முனைவர் T.வெங்கடேசன் நன்றியுரையும் வழங்கினர். நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.
* 12.01.2018 அன்று பிற்பகல் வழிபாட்டிற்குப் பிறகு மாணவர்கள் பொங்கல் விடுமுறைக்காக தத்தமது வீட்டிற்குச் சென்றனர். பொங்கல் விடுமுறைக்குப் பிறகு 17.01.2018 அன்று கல்லூரி தொடங்கியது.
* 22.01.2018 அன்று காலை கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்ற கொடியேற்ற நிகழ்ச்சியின் போது கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நேர்மையான முறையில் தவறாமல் வாக்களிப்போம் என்று தேசிய வாக்காளர் தின உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.
* 22.01.2018 அன்று மாலை ஒலி-ஒளி அரங்கில் மாதாந்திர தேவை அறிதல் கூட்டம் நடைபெற்றது. இதில் மாணவப் பிரதிநிகள் கலந்துகொண்டு மாணவர்களது தேவைகளைத் தெரிவித்தனர். இக்கூட்டத்தில் முதல்வர், துணைமுதல்வர், முதன்மையர் மற்றும் தேர்வுக்கட்டுப்பாட்டாளர், அக தர உத்தரவாத மைய இயக்குநர், உணவுக்கூட மேலாளர், பேராசிரியர்கள், விடுதி ஒருங்கிணைப்பாளர்கள், மற்றும் கண்காணிப்பாளர்கள் கலந்துகொண்டு மாணவர்களின் தேவைகளைக் கேட்டறிந்தனர். மேலும் இக்கூட்டத்தில் 09.02.2018 மற்றும் 10.02.2018 ஆகிய இரு நாட்கள் கல்லூரியில் நடைபெறவுள்ள விளையாட்டு விழா மற்றும் ஜெயந்தி விழா சிறப்பு உணவுகள் குறித்து மாணவர்களின் ஆலோசனைகள் கேட்கப்பட்டன.
* 24.01.2018 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் தேசிய வாக்காளர் தினம் தொடர்பாக பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் கவிதைப்போட்டி நடைபெற்றது. இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு 25.01.2018 அன்று கல்லூரியின் வழிபாட்டுக் கூடத்தில் நடைபெற்ற தேசிய வாக்காளர் தின விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், வாடிப்பட்டி வட்ட வட்டாட்சியர் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.
* 26.01.2018 அன்று கல்லூரி விளையாட்டு மைதானத்தில் 69வது இந்தியக் குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் திருவேடகம், ஸ்ரீராமகிருஷ்ண ஆஸ்ரம துறவி சுவாமி பரமானந்த கொடியேற்றி தேசிய மாணவர் படை மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு குடியரசு தின உரை நிகழ்த்தினார். இவ்விழாவில் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

## தமிழ்த் துறை

* 11.01.2018 அன்று மாலை 06.30 மணி முதல் 08.00 மணி வரை கல்லூரியின் திறந்தவெளி கலையரங்கத்தில் தமிழ்த்துறை சார்பாக நடைபெற்ற பாவை அரங்கம் - திருப்பாவை, திருவெம்பாவை சொற்பொழிவு நிகழ்ச்சியில் மதுரை தியாகராசர் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இராம மலர்விழி மங்கையர்க்கரசி மற்றும் மதுரை, மதுரைக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு.செ.ஜகந்நாத பராங்குச தாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு திருப்பாவை மற்றும் திருவெம்பாவை குறித்த பக்தி, இலக்கிய சொற்பொழிவு நிகழ்த்தினர். இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.
* 28.01.2018 அன்று தமிழ்த்துறை மற்றும் பாரதி சிந்தனை அரங்கம் சார்பாக கல்லூரியின் வழிபாட்டுக் கூடத்தில் நடைபெற்ற சிறப்பு சொற்பொழிவில் தேவகோட்டை, ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரியின் மேனாள் தமிழ்ப்பேரசிரியர் முனைவர் வ.தேனப்பன் சிறப்பு பேச்சாளராகக் கலந்துகொண்டு ‘தனிமரம் தோப்பாகிறது’ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

## சமஸ்கிருதத் துறை

* 18.01.2018 மற்றும் 19.01.2018 ஆகிய நாட்களில் மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சமஸ்கிருத பாடத்திட்டக் குழுக் கூட்டத்தில் சமஸ்கிருதத் துறைத்தலைவர் முனைவர் S.ஸ்ரீதர் சுவாமிநாதன் கலந்துகொண்டு பாடத்திட்ட சீரமைப்பு குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.

## ஆங்கிலத் துறை

* 06.01.2018 அன்று சென்னை, டாக்டர் எம்.ஜி.ஆர்-ஜானகி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் THUDI தன்னார்வத் தொண்டு நிறுவனம் வழங்கிய முனைவர் பட்ட ஆராய்ச்சிக்கான கௌரவ அங்கீகார சான்றிதழை உதவிப்பேராசிரியர் முனைவர் S.பாரதிராஜா பெற்றார்.
* 11.01.2018 மற்றும் 12.01.2018 ஆகிய நாட்களில் விருதுநகர், V.V.வன்னியபெருமாள் நாடார் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இரண்டு நாள் பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர்கள் முனைவர் S.பாரதிராஜா மற்றும் முனைவர் P.சரவணக்குமார் கலந்துகொண்டு “Testimonio Culture as an Offshot of Subaltern Literature: An Analysis of Anita Hair’s Ladies Coupe” என்ற தலைப்பிலான கட்டுரையினை சமர்ப்பித்தனர்.
* 24.01.2018 மற்றும் 25.01.2018 ஆகிய இரண்டு நாட்கள் திருச்சிராப்பள்ளி, புனித வளனார் கல்லூரியின் ஆங்கிலத்துறையில் நடைபெற்ற “Teaching English with Technology” என்ற தலைப்பிலான ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறையில் துறைத்தலைவர் திரு.P.குமரேசன் கலந்துகொண்டு பயிற்சிபெற்றார்.

* 30.01.2018 அன்று தாமபுரி, டான் போஸ்கோ கல்லூரியின் ஆங்கிலத் துறையில் நடைபெற்ற ஆய்வியல் நிறைஞர் (M.Phil) மாணவர்களுக்கான வாய்மொழித் தேர்வு நடைபெற்றது. அதில் உதவிப்பேராசிரியர் முனைவர் S.பாரதிராஜா புறத்தேர்வராகக் கலந்துகொண்டு வாய்மொழித் தேர்வு நடத்தினார்.

## ஹிந்தித் துறை

* 31.01.2018 அன்று மதுரை, டோக் பெருமாட்டி மகளிர் கல்லூரியின் ஹிந்தித்துறையில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகளில் நமது கல்லூரி மாணவர்கள் 12பேர் உதவிப்பேராசிரியர் திரு.R.மோகன்ராஜ் மேற்பார்வையில் சென்று கலந்துகொண்டனர். இதில் ஓவியப்போட்டியில் முதல் பரிசும், குழுப் பாடல்போட்டியில் முதல் பரிசும், குழு நடனப்போட்டியில் இரண்டாம் பரிசும், நாடகப்போட்டியில் மூன்றாம் பரிசும் பெற்றனர்.

## பொருளியல் துறை

* 12.01.2018 அன்று மதுரை, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற "Attitude, Value, Knowledge, and Skill Oriented Curracula for Students' Empowerment and Employability" என்ற தலைப்பிலான பல்கலைக் கழக பாடத்திட்ட மேம்பாடு குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் திரு.A.சதீஷ்பாபு கலந்துகொண்டார்.
* 24.01.2018 அன்று நமது கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் M.அருள்மாறன் 'Rural Entrepreneurship in India: Challenges and Opportunities' என்ற தலைப்பிலும், திரு.N.தினகரன் மற்றும் முனைவர் G.அசோக்குமார் இணைந்து "Policy Reforms and Challenges Faced by Women Entrepreneurs in India" என்ற தலைப்பிலும் கட்டுரை சமர்ப்பித்தனர்.

## வரலாற்றுத் துறை

* 24.01.2018 அன்று கல்லூரியின் வரலாற்றுத் துறை மற்றும் தேசிய மாணவர் படை இணைந்து நடத்திய "Indian Armed Forces: Career Services Today" என்ற தலைப்பிலான ஒருநாள் கருத்தரங்கு ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்றது. இக்கருத்தரங்கின் துவக்கவிழாவில் திருவேடகம், ஸ்ரீ இராமகிருஷ்ண ஆஸ்ரம துறவி சுவாமி பரமானந்த, ஆசியுரை வழங்கினார். கல்லூரி முதல்வர் தலைமையுரையாற்றினார். தேசிய மாணவர் படை அலுவலர் திரு.V.ராஜேந்திரன் துவக்கவுரை நிகழ்த்தினார். கருத்தரங்கில் தூத்துக்குடி மாவட்டம், Giants Groups தலைவர், ஓய்வுபெற்ற லெப்டினன்ட் கர்னல் M.சுந்தரம், 'Indian Armed Forces: The Pride of the Nations' என்ற தலைப்பிலும், மதுரை, சௌராஷ்ட்ரா கல்லூரி, இயற்பியல்துறைத் தலைவர் கேப்டன் T.K.விஷ்ணு ராம், 'Indian Armes Forces: Career Options' என்ற தலைப்பிலும் இந்திய இராணுவத்தில் உள்ள பல்வேறு வேலைவாய்ப்புக்கள் குறித்து உரையாற்றினர். கருத்தரங்கின் நிறைவு விழாவில் மதுரை, தியாகராசர் கல்லூரியின் தேசிய மாணவர் படை அலுவலர் மற்றும் விலங்கியல்துறை இணைப்பேராசிரியர் கேப்டன் முனைவர் N.அருண் நாகேந்திரன் நிறைவுரையாற்றினார். இக்கருத்தரங்கில் வரலாற்றுத்துறைப் பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்லூரி தேசிய மாணவர் படை மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கருத்தரங்கின் மற்றொரு நிகழ்வாக "Army Postal Services (APS)" என்ற தலைப்பிலான தபால் தலைகள் கண்காட்சி நடைபெற்றது. கல்லூரியின் விலங்கியல்துறை முன்னாள் பேராசிரியரும், தேசிய மாணவர் படை அலுவலருமான மேஜர் P.சந்திரசேகரன் கண்காட்சியினைத் தொடங்கிவைத்தார்.

## வணிகவியல் துறை

* 02.01.2018 அன்று மதுரை, தியாகராசர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற தேசிய தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட்ட கற்றல் நிகழ்ச்சியின் (National Programme on Technology Enhanced Learning) ஒருநாள் பயிற்சிப் பட்டறையில் இணைப்பேராசிரியர் மற்றும் துணைமுதல்வர் முனைவர் T.வெங்கடேசன் கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்.
* 12.01.2018 அன்று மதுரை, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற "Attitude, Value, Knowledge, and Skill Oriented Curracula for Students' Empowerment and Employability" என்ற தலைப்பிலான பல்கலைக் கழக பாடத்திட்ட மேம்பாடு குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கில் இணைப்பேராசிரியர் முனைவர் T.வெங்கடேசன் கலந்துகொண்டார்.
* 20.01.2018 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற மாணவர் மென் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் Weekly News Bulletin, TCS மென்பொருள் நிறுவனம் குறித்த கட்டுரை வாசித்தல், Who Am I?, Views of the News, Business Quiz ஆகிய நிகழ்ச்சிகள் மாணவர்களால் நடத்தப்பெற்றன.
* 23.01.2018 அன்று மதுரை, மீனாட்சி அரசு மகளிர் கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற பாடத்திட்டக் குழுக் கூட்டத்தில் இணைப்பேராசிரியர் முனைவர் K.கார்த்திகேயன் கலந்துகொண்டு பாடத்திட்ட மேம்பாடு குறித்த பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.
* 23.01.2018 அன்று அருப்புக்கோட்டை, சைவ பானு ஷத்திரிய கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகளில் உதவிப்பேராசிரியர் முனைவர் S.வடிவேல்ராஜா தலைமையில் 12 மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் As U Like It போட்டியில் முதல் பரிசும், வினாடி-வினா போட்டியில் முதல் பரிசும், குறும்படப் போட்டியில் முதல் பரிசும், கோலப்போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றுதுடன் ஒட்டுமொத்த சாம்பியன் கோப்பையைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.
* 24.01.2018 அன்று வணிகவியல் துறையில் "இந்தியாவில் தொழில்முனைவோருக்கான வாய்ப்புகள் மற்றும் சவால்கள் (Entrepreneurship in India: Opportunities and Challenges)" என்ற தலைப்பில் ஒருநாள் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கின் துவக்கவிழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் S.இராஜா தலைமையுரை ஆற்றினார். மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வியக இயக்குநர் முனைவர் J.விஜயதுரை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். துணைமுதல்வர் முனைவர் T.வெங்கடேசன் நன்றியுரை வழங்கினார். பாண்டிச்சேரி, பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தின் வங்கித் தொழில்நுட்பத்துறை இணைப்பேராசிரியர் முனைவர் S.சுடலைமுத்து "Models of Digipreneurship-Opptotunities and Challenges" என்ற தலைப்பிலும் சென்னை, அகாரா ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குநர் திரு.சேதுராமன் ராமநாதன் "Opportunities and Challenges in Entrepreneurship" என்ற தலைப்பிலும், பெங்களூரு, R.R.மேலாண்மை கல்வி நிறுவனத்தின் அக தர உத்தரவாத மைய இயக்குநர் பேராசிரியர் G.மாய சலிமத் "Government Schemes for Entrepreneurial Motivation" என்ற தலைப்பிலும் உரையாற்றினர். நிறைவு விழாவில் காரைக்குடி, அழகப்பா பல்கலைக் கழக வங்கி மேலாண்மை துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் RM.சிதம்பரம் பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி நிறைவுரையாற்றினார்.
* 24.01.2018 அன்று துறையில் நடைபெற்ற ஒருநாள் தேசிய கருத்தரங்கில் துறைப்பேராசிரியர்கள் முனைவர் K.அழகேசன், முனைவர் S.பசுபதி, முனைவர் T.வெங்கடேசன், முனைவர் K.கார்த்திகேயன், முனைவர் K.செல்லப்பாண்டியன், முனைவர் S.சந்திரசேகரன், முனைவர் C.வடிவேல், முனைவர் S.வடிவேல்ராஜா, திரு.M.பிரேமானந்தம், திரு.R.மோகன்ராஜ் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் V.சக்திகுமரன், M.தினேஷ்குமார், M.ஜெகதீசன், R.குருமேகலைராஜன், M.வான்தமிழ் வலம்புரிநாதன் ஆகியோர் கலந்துகொண்டு கட்டுரைகள் சமர்ப்பித்தனர்.
* 25.01.2018 அன்று சிவகாசி, அய்யநாடார் - ஜானகி அம்மாள் கல்லூரியின் வணிகவியல் துறையில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகளில் உதவிப்பேராசிரியர் C.வடிவேல் தலைமையில் 11 மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் Connecxions போட்டியில் முதல் பரிசும், பென்சில் ஓவியப்போட்டியில் முதல் பரிசும், போஸ்டர் தயாரித்தல் போட்டியில் முதல் பரிசும் பெற்றதுடன் நமது கல்லூரி அணி ஒட்டு மொத்த சாம்பியன் பட்டம் பெற்று கோப்பையை பெற்றது.

## கணிதவியல் துறை

* 11.01.2018 முதல் 13.01.2018 வரையிலான மூன்று நாட்கள் திருவனந்தபுரம், கேரளா பல்கலைக்கழகத்தின் கணிதத்துறையில் நடைபெற்ற Discrete and Computational Mathematics (NCDCM – 2018) என்ற தலைப்பிலான பன்னாட்டுக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் முனைவர் C.ராஜன் கலந்துகொண்டு "New Contra Continuity and Separation Axioms" என்ற தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்தார்.
* 18.01.2018 முதல் 20.01.2018 வரையிலான நாட்களில் திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் கணிதவியல் துறையில் நடைபெற்ற 'Discrete Mathematics and Its Applications' என்ற தலைப்பிலான சர்வதேசக் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியர் திரு.T.பொன்னுச்சாமி கலந்துகொண்டு "Non-split Perfect Triple Connected Domination Number in Different Product of Paths" என்ற தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்தார்.

## இயற்பியல் துறை

* 09.01.2018 அன்று திருச்சிராப்பள்ளி, பிஷப் ஹீபர் கல்லூரியின் இயற்பியல் துறையில் நடைபெற்ற "Frontiers in Advanced Materials and Their Applications (FAMA'18)" என்ற தலைப்பிலான ஒருநாள் சர்வதேசக் கருத்தரங்கில் துறைத்தலைவர் திரு. P.ஜெயசங்கர் கலந்துகொண்டார்.
* 04.01.2018 அன்று ஒலி-ஒளி அரங்கில் மாணவர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி Thursday Meet-11 துறையின் இரண்டாமாண்டு மாணவர்களால் நடத்தப்பட்டது. இதில் இயற்பியல் விதியை விவரிக்கும் விளக்கவுரை, அறிவியல் செய்திகள், வினாடி-வினா, நோபல் பரிசு பெற்ற இந்திய இயற்பியல் விஞ்ஞானி சந்திரசேகரன் பற்றிய தொகுப்பு ஆகியவை இடம்பெற்றன.

* 25.01.2018 அன்று ஒலி-ஒளி அரங்கில் மாணவா் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி Thursday Meet-12 துறையின் முதலாமாண்டு மாணவா்களால் நடத்தப்பட்டது. இதில் நியூட்டனின் இயற்பியல் விதிகளை விவரிக்கும் விளக்கவுரை, சந்திர, சூரிய கிரகணங்கள் குறித்த ஒலி ஒளி தொகுப்பு, வினாடி-வினா, திருக்குறள் தெளிவுரை ஆகிய நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன.
* 31.01.2018 அன்று துறையின் இரண்டாமாண்டு மற்றும் மூன்றாமாண்டு மாணவா்கள் மதுரை, திருநகரில் அமைந்துள்ள தொலைநோக்கி மையத்திற்குச் சென்று அன்று நிகழ்ந்த வானியல் அதிசயமான சந்திரகிரகணம், நீலநிலவு மற்றும் சூப்பா்மூன் ஆகியவற்றைக் கண்டுகளித்தனா். பேராசிரியா்கள் திரு.V.ராஜேந்திரன் மற்றும் திரு.S.கணேசன் மாணவா்களை அழைத்துச்சென்றனா்.

## வேதியியல் துறை

* 03.01.2018 அன்று விருதுநகா், V.V.வன்னியபெருமாள் மகளிா் கல்லூரியின் வேதியியல் துறையில் நடைபெற்ற விருந்தினா் விரிவுரை நிகழ்ச்சியில் உதவிப்பேராசிரியா் முனைவா் V.M.கணபதி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு "Opprotunities in Research for Chemist – Energy Devices" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினாா்.
* 23.01.2018 அன்று ஒலி-ஒளி அரங்கில் வேதியியல் துறை சாா்பாக "Career Opprotunities for Budding Chemissts in DAE (Department of Atomic Energy)" என்ற தலைப்பிலான விருந்தினா் விரிவுரை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வா் முனைவா் S.இராஜா தலைமை தாங்கி தலைமையுரையாற்றினாா். கல்பாக்கம் OGCAR நிறுவனத்தின் அறிவியல் அதிகாரி முனைவா் N.ராமநாதன் மற்றும் தொழில்நுட்ப அலுவலா் திருமதி K.சாய்பிரியா ஆகியோா் சிறப்பு விருந்தினா்களாகக் கலந்துகொண்டு மாணவா்களிடையே சிறப்புரையாற்றினா்.
* 29.01.2018 முதல் 31.01.2018 வரையிலான மூன்று நாட்கள் அருப்புக்கோட்டை, தேவாங்கா் கலைக் கல்லூரியின் வேதியியல் துறையில் நடைபெற்ற "Energing Trends in Inorganic Chemical Biology" என்ற தலைப்பிலான தேசிய அளவிலான கருத்தரங்கில் உதவிப்பேராசிரியா்கள் முனைவா் M.கணபதி மற்றும் முனைவா் D.திருப்பதி ஆகியோா் 7 மாணவா்களுடன் சென்று கலந்துகொண்டனா்.

## தாவரவியல் துறை

* 02.01.2018 அன்று மதுரை, மதுரை காமராசா் பல்கலைக் கழகத்தின் தாவரவியல் துறையில் நடைபெற்ற "Immunology" என்ற தலைப்பிலான ஒருநாள் பயிற்சிப் பட்டறையில் முதுகலை முதலாமாண்டு மாணவா் R.ராமகிருஷ்ணன் கலந்துகொண்டு பயிற்சிபெற்றாா்.
* 12.01.2018 அன்று மதுரை, மதுரை காமராசா் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற "Attitude, Value, Knowledge, and Skill Oriented Curruculа for Students' Empowerment and Employability" என்ற தலைப்பிலான பல்கலைக் கழக பாடத்திட்ட மேம்பாடு குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கில் இணைப்பேராசிரியா் முனைவா் N.லட்சுமணன் கலந்துகொண்டாா்.
* 25.01.2018 அன்று விருதுநகா், செந்திக்குமார நாடாா் கல்லூரியின் தாவரவியல் துறையில் நடைபெற்ற "Recent advances in Plant Sciences" என்ற தலைப்பிலான ஒருநாள் கருத்தரங்கில் உதவிப்பேராசிரியா் முனைவா் V.ரமேஷ் மற்றும் இளங்கலை தாவரவியல் மாணவா்கள் 20 போ் கலந்துகொண்டனா்.
* 24.01.2015 மற்றும் 25.01.2018 ஆகிய நாட்களில் திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் தாவரவியல் துறையில் இந்திய அறிவியல் கழகம் சாா்பாக நடைபெற்ற "Science Academies Lecture Workshop on Conservation and Protection of Bioresources" என்ற தலைப்பிலான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையில் உதவிப்பேராசிரியா் P.பவுன்ராஜ் மற்றும் 12 மாணவா்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனா்.

## விலங்கியல் துறை

* 02.01.2018 அன்று மதுரை, தியாகராசா் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற தேசிய தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட்ட கற்றல் நிகழ்ச்சியின் (National Programme on Technology Enhanced Learning) ஒருநாள் பயிற்சிப் பட்டறையில் துறைத்தலைவா் முனைவா் P.ராஜேந்திரன் கலந்துகொண்டு பயிற்சி பெற்றாா்.
* 12.01.2018 அன்று மதுரை, மதுரை காமராசா் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற "Attitude, Value, Knowledge, and Skill Oriented Curruculа for Students' Empowerment and Employability" என்ற தலைப்பிலான பல்கலைக் கழக பாடத்திட்ட மேம்பாடு குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கில் இணைப்பேராசிரியா் திரு.V.பாா்த்தசாரதி கலந்துகொண்டாா்.
* 20.01.2018 அன்று நத்தம், NPR கல்லூரியின் விலங்கியல் துறையில் நடைபெற்ற "அறிவுசாா் சொத்துரிமை (Intellectual Property Rights)" என்ற தலைப்பிலான ஒருநாள் தொழில்நுட்பப் பயிற்சிப் பட்டறையில் இணைப்பேராசிரியா் திரு.V.பாா்த்தசாரதி மற்றும் உதவிப்பேராசிரியா் K.ரமேஷ்குமாா் ஆகியோா் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனா்.
* 23.01.2018 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் விலங்கியல் துறை மற்றும் தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் சங்கம் இணைந்து நடத்திய ஒருநாள் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் வேலூா், வேலூா் தொழில்நுட்ப நிறுவனத்தின் உயிாிஅறிவியல் மற்றும் தொழில்நுட்பப் புலத்தின் விஞ்ஞானி முனைவா் S.ராஜ்குமாா் "Recent Advances and Application of Nanobiotechnology" என்ற தலைப்பிலும், சேலம், தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு மைய விஞ்ஞானி முனைவா் A.மணிசேகா் "Urban Air Pollution and Their Impace on Human Health" என்ற தலைப்பிலும், மதுரை, மதுரை காமராசா் பல்கலைக்கழக மரபணு பொறியியல் துறை இணைப்பேராசிரியா் முனைவா் B.அசோக்குமாா் "Caenorhabditis Elegans as Animal Model to Study Orthologous Genes in Humans" என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினா். இந்நிகழ்ச்சியில பல்வேறு கல்லூரிகளைச் சோ்ந்த பேராசிரியா்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு பயனடைந்தனா்.
* 24.01.2018 மற்றும் 25.01.2018 ஆகிய நாட்களில் "Conservation and Protection of Bioresources" என்ற தலைப்பில் திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் விலங்கியல் துறையில் நடைபெற்ற அறிவியல் பாடத்திட்ட விரிவுரை பயிற்சிப் பட்டறையில் உதவிப்பேராசிரியா் முனைவா் M.பவுன்ராஜ் கலந்துகொண்டாா்.
* 25.01.2018 மற்றும் 26.01.2018 ஆகிய நாட்களில் இணைப்பேராசிரியா் திரு.V.பாா்த்தசாரதி, உதவிப்பேராசிரியா் முனைவா் T.ரமேஷ் மற்றும் ஆய்வக உதவியாளா் திரு.கான்ட்ராக்டா் ஆகியோருடன் இளங்கலை முதலாமாண்டு மாணவா்கள் 17 போ் இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்திற்குச் சென்று அப்பகுதியின் பல்வேறு கடல்வாழ் உயிரினங்களைக் கண்டு வந்தனா்.

## கணினி அறிவியல் துறை

* 24.01.2018 அன்று மதுரை, மதுரைக் கல்லூரியின் கணினி அறிவியல்துறையில் "Big Data Analytics" என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் 5 மாணவா்கள் கலந்துகொண்டு 'Big-Data & Hadoop' என்ற தலைப்பில் கட்டுரை சமா்ப்பித்தனா்.
* 27.01.2018 அன்று மாணவா் மென் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி (SSDP 6) ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்றது. மூன்றாமாண்டு மாணவா்களால் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் கட்டுரை சமா்ப்பித்தல், Weekly News, கணினிஅறிவியல் சம்பந்தமான வினாடிவினா, Identify the Personality, Debugging ஆகிய நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன. இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக பொருளியல் துறைத்தலைவா் முனைவா் P.பட்டினத்தாா் கலந்துகொண்டு மாணவா்களுக்குப் பரிசுகள் வழங்கி பாராட்டினாா்.
* 29.01.2018 அன்று கல்லூரியின் ஒலி-ஒளி அரங்கில் கணினி அறிவியல் துறை மற்றும் மதுரை, எல்ஸியம் அகாடமி இணைந்து நடத்திய விருந்தினா் விரிவுரை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வா் முனைவா் S.இராஜா தலைமையுரையாற்றினாா், துணைமுதல்வா் முனைவா் T.வெங்கடேசன் வாழ்த்துரை வழங்கினாா். மதுரை, எல்ஸியம் அகாடமியின் பயிற்றுநா் 'Android App" என்ற தலைப்பில் கைபேசியில் பயன்படுத்தப்படும் ஆண்ராய்டு செயலி குறித்து விரிவுரையாற்றினாா்.
* 30.01.2018 அன்று நமது கல்லூரியின் தாவரவியல்துறையில் நடைபெற்ற இயற்கை வேளாண்மை குறித்த ஒருநாள் பயிற்சிப் பட்டறையில் முதலாமாண்டு மாணவா் T.முத்துக்குமாா் கலந்துகொண்டு பயிற்சி பெற்றாா்.
* 30.01.2018 அன்று மாணவா் மென் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி (SSDP 7) ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்றது. மூன்றாமாண்டு மாணவா்களால் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் கட்டுரை சமா்ப்பித்தல், Weekly News, கணினிஅறிவியல் சம்பந்தமான வினாடிவினா, Identify the Personality, Debugging ஆகிய நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன. இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக சமஸ்கிருதத் துறைத்தலைவா் முனைவா் S.ஸ்ரீதா் சுவாமிநாதன் கலந்துகொண்டு மாணவா்களுக்குப் பரிசுகள் வழங்கி பாராட்டினாா்.

## வணிகவியல் கணினிப் பயன்பாட்டுத் துறை

* 24.01.2018 அன்று இரண்டாமாண்டு மற்றும் மூன்றாமாண்டு வணிகவியல் கணினிப் பயன்பாட்டுத்துறை மாணவா்கள் உதவிப்பேராசிரியா்கள் திரு.R.காா்த்திகேயன் மற்றும் திரு.M.மோகன் ஆகியோா் மேற்பாா்வையில் ஆன்ட்ராய்டு செயலி (Android App) உருவாக்கும் மதுரை, எல்சியம் மென்பொருள் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் மதுரை, பால் மற்றும் பால்பொருட்கள் உற்பத்தி நிறுவனமான தமிழக அரசின் ஆவின் பால்பண்ணை ஆகியவற்றை பாா்வையிட்டு அதிகாரிகளிடம் பல்வேறு சந்தேகங்களைக் கேட்டு விளக்கம் பெற்றனா்.
* 24.01.2018 அன்று வணிகவியல் துறையில் நடைபெற்ற ஒருநாள் தேசிய கருத்தரங்கில் பேராசிரியா்கள் முனைவா் K.B.ராஜா, திரு.B.மாாிமுத்து, திரு.C.சுந்தரம், திரு.M.மோகன் ஆகியோா் கலந்துகொண்டு கட்டுரைகள் சமா்ப்பித்தனா்.
* 27.01.2018 அன்று ஒலி-ஒளி அரங்கில் நடைபெற்ற மாணவா் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியை உதவிப்பேராசிரியா் முனைவா் K.B.ராஜா தொகுத்து வழங்கினாா். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக இயற்பியல்துறை உதவிப்பேராசிரியா் திரு S.கணேசன் கலந்துகொண்டாா். இந்நிகழ்ச்சியில்

வரவேற்புரை, ஆங்கில செய்திகள், ஹிந்தி செய்திகள், வினாடி வினா, கட்டுரை சமர்ப்பித்தல், குறும்படம், நன்றியுரை ஆகிய நிகழ்வுகள் மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன.

**உடற்கல்வித் துறை**

* 11.01.2018 அன்று மதுரை, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கோ-கோ விளையாட்டு பல்கலைக்கழக அணிக்கான வீரர்கள் தேர்வில் மூன்றாமாண்டு விலங்கியல் மாணவர்க சக்திவேல் கலந்துகொண்டார்.

**நூலகத் துறை**

* 06.01.2018 அன்று திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் நூலகத்துறையில் நடைபெற்ற முனைவர் பட்ட ஆய்வு நெறியாளர் குழுக் கூட்டத்தில் நூலகர் முனைவர் M.பிரபாகரன் குழு உறுப்பினராகக் கலந்துகொண்டு முனைவர் பட்ட ஆய்வு குறித்த கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.
* 23.01.2018 அன்று கல்லூரியின் நூலகத்துறை மற்றும் இந்திய தொழில்நுட்ப நிறுவனம், மும்பை இணைந்து வணிகவியல் கணினிப் பயன்பாட்டுத்துறைக் கருத்தரங்கக் கூடத்தில் நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மும்பை, இந்திய தொழில்நுட்ப நிறுவத்தின் பேச்சுப் பயிற்சித் துறையின் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் திரு.முகம்மது காசிம் கான் சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

**NSS/NCC/அப்பர் உழவாரப்பணிக் குழு**

* 15.01.2018 முதல் 18.01.2018 ஆகிய மூன்று நாட்கள் இராமேஸ்வரம், ஸ்ரீராமகிருஷ்ண ஆஸ்ரமத்தில் நடைபெற்ற தை அமாவாசை சிறப்பு அன்னதான முகாமில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் 40பேர் திட்ட அலுவலர் பேராசிரியர் K.காமாட்சி மேற்பார்வையில் சேவையாற்றினர்.
* 16.01.2018 முதல் 25.01.2018 வரை சென்னையில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் கலந்துகொள்வதற்கான நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களுக்கான பயிற்சியில் P.யோகேஷ்குமார் கலந்துகொண்டு பயிற்சி பெற்றார். இவர் 26.01.2016 அன்று சென்னையில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் கலந்துகொண்டு கல்லூரிக்கு பெருமை சேர்த்தார்.
* 21.01.2018 அன்று நாட்டு நலப்பணித் திட்ட அணி எண் 77ன் ஒருநாள் சிறப்பு முகாம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதில் திட்ட அலுவலர் முனைவர் T.செல்லத்துரை மற்றும் உதவி திட்ட அலுவலர் முனைவர் G.ராஜ்குமார் ஆகியோர் மேற்பார்வையில் 56 மாணவர்கள் கல்லூரி மைதானத்தை சுத்தப்படுத்துதல், வளாகத் தூய்மை ஆகிய பணிகளில் ஈடுபட்டனர்.
* கல்லூரியின் தேசிய மாணவர் படை மாணவர்கள் P.அழகுராஜா (II Phy) மற்றும் A.பாலஅரவிந்த் (II B.Com) ஆகியோர் பல்வேறு பயிற்சி முகாமில் கலந்துகொண்டு தேர்வு பெற்று 26.01.2018 அன்று புதுதில்லியில் நடைபெற்ற குடியரசு தினவிழா அணிவகுப்பில் கலந்துகொண்டு கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர். இவர்கள் புதுதில்லி, குடியரசுத்தலைவர் மாளிகை மற்றும் சென்னை, ஆளுநர் மாளிகையில் நடைபெறும் விழாக்களில் கலந்துகொண்டு 5.02.2018 அன்று கல்லூரிக்குத் திரும்புகின்றனர்.
* 22.01.2018 அன்று முதலமாண்டு அப்பர் உழவாரப் பணிக்குழு மாணவர்கள் 50 பேர் உதவிப்பேராசிரியர் திரு.M.இரகு மற்றும் விடுதிக்கண்காணிப்பாளர் D.விக்னேஷ்வரன் ஆகியோர் தலைமையில் வாடிப்பட்டி வட்டம், குட்லாடம்பட்டி, போதிதர்மர் யோக மையத்தில் மரம்நடுதல் மற்றும் தூய்மைப் பணிகளில் ஈடுபட்டனர்.
* 22.01.2018 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற ஒருநாள் சிறப்பு முகாமில் நாட்டு நலப்பணித் திட்ட அணி 77ன் மாணவர்கள் 50 திட்ட அலுவலர் முனைவர் T.செல்லத்துரை மற்றும் உதவி அலுவலர் முனைவர் G.ராஜ்குமார் மேற்பார்வையில் விளையாட்டு மைதானத்தை தூய்மைப்படுத்துதல், பூந்தோட்ட பராமரிப்பு ஆகிய பணிகளை மேற்கொண்டனர்.
* 22.01.2018 மற்றும் 23.01.2018 ஆகிய நாட்களில் கரூர், ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமத்தில் நடைபெற்ற இரண்டு நாள் முகாமில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் 83 பேர் உதவிப்பேராசிரியர் திரு.R.மோகன்ராஜ் மற்றும் விடுதிக் கண்காணிப்பாளர் திரு.M.முத்துவேல் ஆகியோர் மேற்பார்வையில் கலந்துகொண்டனர்.
* 29.01.2018 அன்று மதுரை, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற மரம் நடும் விழாவில் நமது கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் 55பேர் பேராசிரியர் முனைவர் T.செல்லதுரை மற்றும் விடுதிக் கண்காணிப்பாளர் திரு.M.முத்துவேல் ஆகியோர் மேற்பார்வையில் கலந்துகொண்டு மரக்கன்றுகள் நட்டனர்.
* 29.01.2018 மற்றும் 30.01.2018 ஆகிய நாட்களில் கரூர், ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமத்தில் நடைபெற்ற இரண்டு நாள் முகாமில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் 10பேர் உதவிப்பேராசிரியர் திரு.M.இரகு மேற்பார்வையில் கலந்துகொண்டனர்.

**இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்**

* 19.01.2018 அன்று கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்க திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் P.பட்டினத்தார் தலைமையில் 20 மாணவர்கள் மதுரை, இராஜாஜி அரசு மருத்துவமனையில் நடைபெற்ற மருத்துவமனை துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.
* 24.01.2018 அன்று கல்லூரியின் இளைஞர் செஞ்சிவைச் சங்கம், நாட்டு நலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படை மற்றும் சோழவந்தான், அரசு மருத்துவமனை ஆகியவை இணைந்து நடத்திய இரத்த தான முகாம் கல்லூரியின் மைய நூலகத்தில் நடைபெற்றது. முகாமின் துவக்க நிகழ்ச்சியில் மருத்துவமனையின் மருத்துவ அலுவலர் திருமதி S.ரமாஸ்ரீ துவக்கவுரை நிகழ்த்தினார். கல்லூரி முதல்வர் முனைவர் S.இராஜா தலைமை தாங்கினார். முகாமில் 47 மாணவர்கள் இரத்தம் தானம் செய்தனர்.

**கலை இலக்கிய மன்றம்**

* 23.01.2018 அன்று மதுரை, கம்பன் கழகத்தில் நடைபெற்ற பேச்சுப்போட்டி மற்றும் இசைப்போட்டியில் 5 மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் S.அரவிந்தன், (III Eco) இசைப்போட்டியில் மூன்றாம் பரிசும், Y.ஹரிஹரன், (II Che) பேச்சுப்போட்டியில் முதல் பரிசும் பெற்றனர்.
* 25.01.2018 அன்று மதுரை, SBT சிறப்பு கல்வியியல் கல்லூரியில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகளில் கலை இலக்கிய மன்ற மாணவர்கள் 6பேர் கலந்துகொண்டனர். இதில் M.பவித்ரன் (II Che) கவிதைப்போட்டியில் இரண்டாம் பரிசும், T.கலைச்செல்வன் (II Maths) Collage போட்டியில் இரண்டாம் பரிசும் பெற்றனர்.

**குருதிக்கொடை**

* 06.01.2018 அன்று S.சவடமுத்து (III Maths) சோழவந்தான், விஜயலட்சுமி மருத்துவமனையிலும், 17.01.2018 அன்று P.துரைகிருஷ்ணன் (II Phy), P.ஜெயபிரதாப் (III Che) சமயநல்லூர், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், 29.01.2018 அன்று M.சிவராமன் (II CS), S.விக்னேஷ்வரன் (II Maths), T.தங்கதுரை (II Phy), V.சுஜித் (II Eng), P.நல்லபாண்டி (II CS), K.பிரபாகரன் (II CA) ஆகியோர் மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனையிலும் இரத்ததானம் செய்தனர்.

**விடுமுறை மற்றும் திறக்கும் நாள்**

* 11.02.2018 ஞாயிற்றுக்கிழமை காலை பிரார்த்தனைக்குப் பின் அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களும் இடை பருவ விடுமுறைக்காகத் தத்தமது ஊர்களுக்குச் செல்கின்றனர். விடுமுறைக்குப் பிறகு 21.02.2018 புதன்கிழமையன்று கல்லூரி துவங்குகிறது. ஆகையால் முதலாமாண்டு மாணவர்கள் 20.02.2018 செவ்வாய்க்கிழமை இரவு 7.00 மணிக்குள்ளும் இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மற்றும் முதுகலை மாணவர்கள் அனைவரும் 8.40 மணிக்குள்ளும் வந்துவிடவேண்டும். அன்று இரவு உணவை மாணவர்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

**மாணவர்கள் செய்யவேண்டியவை**

* மாணவர்கள் வீட்டிற்குச் சென்றவுடனும், வீட்டிலிருந்து கல்லூரிக்குத் திரும்பும் போதும் தாய் தந்தையரை வணங்கி ஆசிபெற்று வரவேண்டும்.
* மாணவர்கள் விடுமுறையில் தங்கள் தினசரி நிகழ்வுகளை கட்டுரை ஏட்டில் ஒரு நாளைக்கு 250 வார்த்தைகள் ஆங்கிலத்தில் எழுதி பெற்றோர் கையொப்பம் பெற்று கல்லூரிக்கு வரும்பொழுது குருகுல அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**2018 ஜனவரி மாதத்திற்கான கட்டண விவரம்**

* உணவுக் கட்டணம் நாள் ஒன்றுக்கு - ரூ.90/-
* நாட்டு நலப்பணித் திட்ட அணி எண் 75ன் முதலாமாண்டு மாணவர்களுக்கு T-shirt வழங்கியது - ரூ.100/-
* இளங்கலை முதலாமாண்டு கணினி அறிவியல் மாணவர்களுக்கு தமிழ் மொழிப்பாடப் புத்தகம் வழங்கியது - ரூ.145/-
* விவேகானந்த கேந்திரா - பண்பாட்டுத் தேர்வு முதலாமாண்டு மாணவர்களுக்கு தேசிய காவியம் இராமாயணம் புத்தகம் வழங்கியது - ரூ.40/-

**அன்பும் நமஸ்காரமும்**

இடம்: திருவேடகம் மேற்கு

நாள்: 02.01.2018

**முனைவர் சீ.இராஜா**

முதல்வர்